# 5.1 பரிசுத்தமும் பிரகாசமும்

**வேத வசனம்:** புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள், அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். எபே. 5:25-27

**சத்தியம்:** இயேசு கிறிஸ்து சபையில் அன்புகூர்ந்து சபைக்காகத் தன் ஜீவனைக் கொடுத்தார். அவர் கடைசி நாட்கள் பரியந்தம் சுத்தமும் தூய்மையுமான மகிமையானச் சபையாக விளங்க வேண்டும் என்று விரும்புகிறார்.

**அறிக்கை:**
ஓ தேவனே சுத்த இருதயத்தை என்னில் சிருஷ்டியும்

## பாடக்குறிப்புகள்

- கறை நிறைந்த அருவருப்பான வாழ்க்கை - *நீதி 6:16-19*
- பரிசுத்தமும் பிரகாசமுமானச் சபையாக இரு - *எபே.5:24-27*
- கர்த்தர் தம்முடைய வார்த்தையினால் கழுவுகிறார் - *சங்கீ. 51:2,3, 119:9*
- கர்த்தர் நம்முடைய இருதயங்களை மறுரூபப்படுத்துகிறார் - *சங்கீ. 51:10, மத். 5:8*

## ஆர்வமூட்டும் வினாக்கள்

(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- நாம் தேவ ஜனங்களாகத் தேவனுடைய வார்த்தையினால் எப்படிச் சுத்திகரிக்கப்படுகிறோம்?
- இவ்வாறு நிகழ்வதில் நம்முடைய பங்கு என்ன?
- வேதம் கூறும் பரிசுத்த ஜாதி என்றால் என்ன? இதைக்குறித்து நீ என்ன நினைக்கிறாய்? (1 பேதுரு 2:9)

**வேதப்பகுதி**
*நீதிமொழிகள் 6:16-19*

## மறுரூபமாக்கப்பட்ட பரிசுத்த இருதயம்

இத்தாலி தேசத்தில் உலகப் புகழ்பெற்ற ஒரு கோபுரம் உள்ளது. 800 வருடங்களுக்கு மேலாக எந்தப் பிரச்சனையுமின்றி நிற்கும் இந்தக் கோபுரத்தின் பெயர் பைசா கோபுரம். இது மேலே 10 அடி அளவிற்கு சரிந்துள்ளது. மோசமான அஸ்திபாரமே இதற்குக் காரணம். மனிதன் செம்மையாகவும் நேர்மையாகவும் நம்பிக்கைக்குரியவனாகவும் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். அதற்காகவே தம்முடைய ஜனங்களுக்குள்ளே நீதியின் ஆவியை வசனத்தின் மூலம் வைக்க விரும்பினார். உன்னுடைய வாழ்வில் நீ எப்படி மாறவேண்டும் என்று சிந்தித்துப்பார். நீ பரிசுத்தமாவதற்கு தேவன் எடுக்கிற ஒரு வழியை உன்னுடைய இருதயத்தில் எழுது அல்லது வரை.

**செயல்**

திறந்த மனதோடும் ஆவலுள்ள ஆவியோடும் அவருடைய சித்தத்தைத் தேடவும் செய்யவும் விரும்பி, தேவனுடைய வார்த்தையை வாசிப்பதையும் தினமும் ஜெபிப்பதையும் நோக்கமாகக் கொள்.

**சிந்திக்க:**
உன் இருதயத்தை தேவன் எவ்விதம் மறுரூபமாக்குகிறார்?

______________________________

______________________________

**ஜெபம்:**
தேவனுடைய வார்த்தையின் சுத்திகரிக்கும் வல்லமையினால் இருதயமும் மனமும் திறக்கப்பட வேண்டி ஜெபத்தை எழுது.

______________________________

______________________________